**முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், செய்யாறு.**

**நாள். 31.10.2025.**

**<u>முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், செய்யாறு.</u>**

**<u>அசல் வழக்கு எண். 57/2024</u>**

2025-ம் ஆண்டு அக்டோபர் மாதம் 31ம் நாள் வெள்ளிக்கிழமை வாதி தரப்பு சாட்சியின் சாட்சியம். உறுதிமொழிச் சட்டம் 1969, பிரிவு 3-ன் படி என்னால் ஆணையிடப்பட்டு, சத்தியபிரமாணம் செய்விக்கப்பட்டு விசாரணை செய்யப்படுகிறது.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | சீதாராமன் | மாவட்டம் | : | திருவண்ணாமலை |
| த/பெ | : | நடராஜன் | வயது | : | 60 |
| ஊர் | : | விண்ணவாடி | தொழில் | : | கூலி |

**<u>வா.சா. 1 (சீதாராமன்): வாதி தரப்பில் முதல் சாட்சியின் குறுக்கு விசாரணை:</u>**

1. 6ம் பிரதிவாதி பெருமாள்சாமி என்னுடைய அண்ணன் ஆவார். 2ம் வாதி நீலகண்டனும் 5ம் பிரதிவாதி கந்தசாமியும் எனக்கு என்ன உறவுமுறை என்றால் என் அண்ணன் வாரிசுகள் ஆவார்கள். 55 செண்ட் கொண்ட வழக்கு சொத்தானது ஆதியில் யாருக்கு உரிமையானது என்றால் முருககவுண்டருக்கு சொந்தமானது. மேற்படி சொத்து என் அப்பாவிற்கு எவ்வளவு பாகம் வந்தது என்றால் 27 1/2 செண்ட் வந்தது. மீதமிருந்த 27 1/2 செண்ட்டானது மாரி கவுண்டருக்கு கிடைக்கப்பெற்று அவர் விற்பனை செய்தார். என் அப்பா நடராஜ கவுண்டருக்கு கிடைக்கப்பெற்ற 27 1/2 செண்ட்டானது அவர்களின் வாரிசுகளான எனக்கும் நரசிம்மனுக்கும் தலா 9 செண்ட்டும், உள்ளூரில் வசிப்பதால் பெருமாள்சாமிக்கு 9 1/2 செண்ட்டாக ஒதுக்கப்பட்டது என்றால் சரிதான்.

2. மேற்படி நரசிம்மனுக்கு ஒதுக்கப்பட்ட 9 செண்ட்டானது அவரின் வாரிசான கந்தசாமியும், நீலகண்டனும் தலா 4 1/2 செண்ட்டாக பிரித்துக்கொண்டார்கள் என்று சொன்னால் சரிதான். எனக்கு ஒதுக்கப்பட்ட சொத்தினை யார் அனுபவிக்கிறார்கள் என்றால் நான் தான் அனுபவிக்கிறேன். எனக்கு ஒதுக்கப்பட்ட சொத்தினை அனுபவிப்பதை கந்தசாமியும், பெருமாள்சாமியும் ஏதேனும் தடை செய்தார்களா என்றால் இல்லை. அதேபோல் நீலகண்டனுக்கு ஒதுக்கப்பட்ட 4 1/2 செண்ட்டை அனுபவிப்பதை மேற்சொன்ன கந்தசாமியும் பெருமாள்சாமியும் ஏதேனும் தடை செய்தார்களா என்றால் இல்லை. கந்தசாமியும் பெருமாள்சாமியும் அவர்களுக்கு

கிடைக்கப்பெற்ற சொத்தை வேறு ஒருவருக்கு விற்கப்பட்ட விவரம் எனக்கு தெரியுமா என்றால் எனக்கு தெரியாது. மேற்படி விற்கப்பட்ட சொத்தினை யார் அனுபவிக்கிறார்கள் என்று தெரியுமா என்றால் பலராமன் என்பவர் அனுபவித்து வருகிறார். மேற்படி கந்தசாமியும் பெருமாள்சாமியும் அவர்களுக்கு உண்டான சொத்தை மட்டும்தான் விற்பனை செய்தார்கள் என்றும் என்னுடைய சொத்தினையும் சேர்த்து விற்கவில்லை என்று சொன்னால் சரியல்ல. என்னுடைய சொத்தையும் சேர்த்துதான் விற்பனை செய்தார்கள். நானும் நீலகண்டனும் அவரவர்களுக்கு உண்டான சொத்தை அனுபவிப்பதை கந்தசாமியும் பெருமாள்சாமியும் தடை செய்யவில்லை என்று சொன்னால் சரியல்ல. நான் பொய்யாக வழக்கு தாக்கல் செய்துள்ளேன் அதனால் வழக்கு தள்ளுபடி செய்யவேண்டும் என்று சொன்னால் சரியல்ல.

**(இத்துடன் குறுக்கு விசாரணை முடிவடைகிறது)**

**<u>மறுவிசாரணை</u>**

இல்லை.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சி அதை படித்து பார்த்து/படிக்கக் கேட்டு சரியென்று ஒப்புக்கொண்டு கையெழுத்து செய்தார்

K NALEENI
Digitally signed by K NALEENI
Date: 2025.10.31 15:49:42 +0530

முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி,

செய்யாறு